புறொப்பட்டி டெவலப்மென்ட் பிஎல்சி நிறுவனம் - 2023

------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

புறொப்பட்டி டெவலப்மென்ட் பிஎல்சீ நிறுவனத்தின் (“கம்பனி”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பெருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளின் விபரம், நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான

வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத்திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்

- பொருத்தமான எழுத்து மூலமான சட்டம், அல்லது கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புக்களுடன் தொகுதி இணங்கியொழுகியிருந்ததா என்பதும்

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- கம்பனியின் வளங்கள் காலவரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1840 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மோசடி தடுப்பு சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 2022 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நோட்டரி சட்டத்தின் | மேற்கூறிய அறிவுறுத்தலின்படி, சான்றளிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள் காலாவதியாகும் முன், அவரால் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு பத்திரத்தையும் | இந்த விடயம் பீ.ஓ.சி (அதாவது குத்தகைதாரர்) உடன் விவாதத்தில் உள்ளது மற்றும் குறிப்பின் கீழ் விடயத்தின் தற்போதைய நிலை குறித்து | காணி பதிவாளரிடம் ஒவ்வொரு பத்திரத்தையும் அல்லது கருவியையும் |

| | | | |
|---|---|---|---|
| திருத்தம் செய்யப்பட்ட விதி 14(30ஏ). | அல்லது கருவியையும் பதிவாளரிடம் பதிவுசெய்வதற்காக சமர்ப்பிக்க வேண்டியது ஒவ்வொரு நோட்டரியின் கடமையாகும். எவ்வாறாயினும், நிறுவனம் குறிப்பிட்ட காலத்திற்குள் நிலப் பதிவேட்டில் தொடர்புடைய ஒப்பந்தத்தை பதிவு செய்யவில்லை. | பின்வரும் உண்மைகள் கூறப்பட்டுள்ளன.<br><br>(அ) இந்த விடயம் பீ.ஓ.சி க்கு (அதாவது குத்தகைதாரர்) 09 ஆகஸ்ட் 2023 திகதியிட்ட பி.டி.எல் (PDL) கடிதத்தின் மூலம் முகாமையாளர் எச். ஆர்.ஏ(HRA)/ பி.டி.எல் PDL மூலம் தெரிவிக்கப்பட்டது.<br><br>(ஆ) பீ.ஓ.சி அவர்களின் கடிதத்தின் குறிப்பு இல: AGM/PROP/CM/pks அடிப்படையில் 12 டிசம்பர் 2023 திகதியிட்ட குறிப்பின் கீழ் உள்ள விடயம் தொடர்பாக சில ஆவணங்களைக் கோரியிருந்தது.<br><br>(இ) பி.டி.எல் (PDL) 18 மார்ச் 2024 திகதியிட்ட பி.டி.எல் இன் கடிதத்தின் மூலம் பீ.ஓ.சி க்கு கூறப்பட்ட ஆவணங்களை அனுப்பியது.<br><br>(ஈ) அதன்படி, பீ.ஓ.சி யிடமிருந்து பதில் கிடைத்தவுடன் சபையின் ஒப்புதலுடன் உரிய நடவடிக்கை தொடங்கப்படும். | குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 914 மில்லியன் தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 793 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 121 மில்லியன் தொகையான அல்லது 15 சதவீத முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் நிதி வருமானம் 46 சதவீதம் அதிகரித்ததேயாகும். மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வருமானம் 5.9 வீதத்தால் அதிகரித்த அதேவேளை, செயற்பாட்டு செலவுகள் 31 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது, இது வருமான அதிகரிப்பை விட அதிக பெறுமதியாகும். இருப்பினும், நிதி வருமானம் அதிக சதவீதத்தால் அதிகரித்ததன் காரணமாக பாதிப்பு நடுநிலையானது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு / (குறைவு) (ரூபா.) | வேறுபாடு % | வேறுபாட்டுக்கான காரணம் |
|---|---|---|---|
| வருமானம் | 56,573,244 | 5.9 | அதிகரித்த வாடகை வருமானம் காரணமாக முந்தைய வருடத்துடன் ஒப்பிடும் போது வருவாய் ரூபா.56.6 மில்லியன் அதிகரித்துள்ளது.<br><br>01 ஜுலை 2022 முதல் நடைமுறைக்கு வரும் புதிய ஒப்பந்தத்தின் காரணமாக வாடகை வருமானம் அதிகரித்துள்ளது. புதிய ஒப்பந்தத்தின்படி ஒரு சதுர அடிக்கு வாடகையானது ரூபா.124 விலிருந்து ரூபா.132 ஆக அதிகரித்துள்ளது.<br><br>மேலும், அக்டோபர் 2022 முதல் விதிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (எஸ்எஸ்சிஎல்) இந்த அதிகரிப்புக்கு வழிவகுத்தது. |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 4,639,686 | 47 | மொபிடெல் மற்றும் டயலொக் நிறுவனங்களின் வாடகை வருமானம் அதிகரித்ததன் காரணமாக, ஏனைய செயற்பாட்டு வருமானம், முந்தைய வருடத்துடன் ஒப்பிடும் போது, ரூபா.4.6 மில்லியன் அதிகரிப்பைக் காட்டியுள்ளது.<br><br>2023 ஆம் ஆண்டில் (2022/23 - ரூபா.203 மற்றும் 2023/24 - ரூபா.369) பணப் பரிமாற்ற வீதம் அதிகரித்ததன் காரணமாக டயலொக் வாடகை அதிகரித்துள்ளது.<br><br>அக்டோபர் 2022 முதல் விதிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (எஸ்எஸ்சிஎல்) இந்த அதிகரிப்புக்கு வழிவகுத்தது. |
| நேர்ச் செலவுகள் | 130,907,249 | 71.4 | முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நேரடிச் செலவுகள் ரூபா.130.9 மில்லியனால் அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் கட்டிடங்களுக்கான காப்பீட்டுக் கொள்கையின் பிரீமியம் அதிகரிப்பு, அதிகரித்த மின் செலவு, அதிகரித்த நகராட்சி கட்டணங்கள் மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரிப்பு. |
| ஊழியர் நலன்களுக்கான செலவினம் | (6,190,996) | (3.3) | முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, முக்கியமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பணியாளர்களின் எண்ணிக்கை (ஓய்வு/குறைவு) குறைந்ததன் காரணமாக, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, ஊழியர்களின் நலன்களுக்கான செலவு ரூபா.6.2 மில்லியனால் குறைந்துள்ளது.<br><br>(2023 இல் 84, 2022 இல் 92) |

| | | | |
|---|---|---|---|
| நிர்வாகம் மற்றும் பிற செயற்பாட்டு செலவுகள் | 13,808,513 | 36.6 | அக்டோபர் 2022 முதல் விதிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு செலவு (எஸ்எஸ்சிஎல்) காரணமாக, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, நிர்வாக மற்றும் பிற இயக்கச் செலவுகள் ரூபா.13.8 மில்லியனால் அதிகரித்துள்ளது. |
| நிதிச் செலவு | 264,397,647 | 46 | நிலையான வைப்புக்கள் மற்றும் ரிபோ (REPO's) வின் வட்டி விகிதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக நிதி வருமானம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா.264.4 மில்லியன் அதிகரித்துள்ளது. |
| வருமான வரி செலவினம் | 66,974,068 | 21.6 | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வருமானம் அதிகரித்ததன் காரணமாக முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமான வரிச் செலவு ரூபா.67 மில்லியனால் அதிகரித்துள்ளது. அத்துடன், 2022 ஆம் ஆண்டில் ஆறு மாத இலாபம் 24 வீதமாக வரி விதிக்கப்பட்டு, 01 ஜனவரி 2023 இல் இருந்து 30 வீதமாக அதிகரித்துள்ளது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் அதற்கு முன்னைய ஆண்டினதும் கம்பனியின் குறிப்பிடத்தக்க முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதம்** | **2023** | **2022** |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் (%) | 39.8 | 51.7 |
| மொத்தச் சொத்துக்களின் மீதான திரும்பல் (%) | 16.6 | 16.6 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (%) | 13.15 | 13.8 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 21:1 | 14.5:1 |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிகர இலாப விகிதம் குறைந்துள்ளது மற்றும் நிறுவனத்தின் நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) தொடர்ந்து பெஞ்ச்மார்க்கை விட அதிக மதிப்பைக் காட்டியுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

பின்வரும் மூலதனப் பணிகளுக்காக 2023 பாதீடு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில் பணிகள் செய்யப்படவில்லை.

| | விபரம் | பாதீடு ஒதுக்கம் (ரூபா.000) | குறிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | எயார் ஹேண்டிங் யூனிட்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | 84,000 | 2023 ஆம் ஆண்டில் எயார் ஹேண்டிங் யூனிட்களை வழங்குவதற்கும் நிறுவுவதற்கும் முழு பட்ஜெட் ஒதுக்கீடும் பயன்படுத்தப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் பூஜ்ஜிய சதவீதமாக உள்ளது. | தற்போதுள்ள எயார் ஹேண்ட்லிங் யூனிட்கள் மேலும் 2 முதல் 3 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்படலாம் என்பதால், திட்டத்தை 2026-ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்க நிர்வாகம் முடிவு செய்தது. | எந்த தாமதமும் இல்லாமல் சரியான நேரத்தில் பாதீடு செய்ய வேண்டும். |
| (ii) | தேர்ந்தெடுக்கப்பட்ட மாடிகளில் மின்சார துணை விநியோக பேனல்களை மாற்றுதல் | 15,000 | திட்டத்திற்கான முழு பாதீடு ஒதுக்கீடும் 2023 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் பூஜ்ஜிய சதவீதமாக உள்ளது. | தற்போதுள்ள மின் துணை விநியோக பேனல்கள் மேலும் 2 முதல் 3 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்படலாம் என்பதால், திட்டத்தை 2026 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்க நிர்வாகம் முடிவு செய்தது. | எந்த தாமதமும் இல்லாமல் சரியான நேரத்தில் பாதீடு செய்ய வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் குறிப்பு இலக்க 07/05/2023 இற்கு அமைய காலியாக உள்ள துணை பராமரிப்பு முகாமையாளர் பதவிக்கு பொருத்தமான பொறியியளாளரைக் கொண்டு விரைவில் நிரப்பப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் நிறுவனம் ஆட்சேர்ப்புக்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | இந்த ஆட்சேர்ப்பு இந்த ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்படும். கோவிட்-19 இலிருந்து பெரும்பாலான முக்கிய பணிகள் நிறுத்தப்பட்டிருப்பதாலும், 2021 முதல் நிலவும் பொருளாதார நெருக்கடியாலும் ஆட்சேர்ப்பு பிட்போடப்பட்டது. | நிறுவனத்திற்கு இந்த முக்கிய பதவியின் தேவையை மதிப்பீடு செய்து அதற்கேற்ப ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். |

### 3.3 சிசிடிவி கேமராவை நிறுவுதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பீ.ஓ.சி தலைமை அலுவலக கட்டிடத்தில் (B2) அமைந்துள்ள பண்டகசாலைகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படவில்லை. | பேஸ்மென்ட் 2ல் உள்ள மூன்று பண்டகசாலை அறைகளின் நுழைவு கதவுகளை காட்டும் வகையில் ஏற்கனவே ஒரு ஐபி அடிப்படையிலான சிசிடிவி கேமரா நிறுவப்பட்டுள்ளது மற்றும் இலங்கை வங்கியுடன் இணைந்து பிரதான பண்டகசாலை அறையின் நுழைவு வாயிலை காட்டும் வகையில் மற்றொரு ஐபி அடிப்படையிலான சிசிடிவி கமெராவை வழங்குவதற்கும் நிறுவுவதற்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். | பண்டகசாலைக்கு அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2023 ஆம் ஆண்டின் பாதீட்டுக்கமைய பராமரிப்புச் செலவுக்கும் நிறுவனத்தின் உண்மையான பராமரிப்புச் செலவுக்கும் இடையே பின்வரும் முக்கிய வேறுபாடுகள் காணப்பட்டன.

| | விபரம் | பாதீட்டு ஒதுக்கம் (ரூபா.) | உண்மைச் செலவு (ரூபா.) | பாதீட்டுடனான வேறுபாடு (ரூபா.) | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (i) | எயார் கண்டிஷனிங் மற்றும் மெக்கானிக்கல் வென்டிலேஷன் சிஸ்டத்தின் பராமரிப்பு | 16,400,000 | 24 ,569,000 | 8,169,000 | மத்திய ஏயார் கண்டிஷனிங்கில் AHU க்கான ஆபரேட்டர்கள் மற்றும் கணினி அடிப்படையிலான AHU முகாமை அமைப்புடன் கூடிய அறிவார்ந்த அழுத்த வெப்பநிலை சார்பற்ற ஓட்டக் கட்டுப்பாட்டு வால்வுகளை 2 வழி மொடுலேட்டிங் வழங்குதல் மற்றும் நிறுவுவதற்கான ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட வால்வுகள், வெப்பநிலை உணரிகள் போன்ற உபகரணங்களுக்கு ஏற்படும் செலவை மூலதனமாக்க முடியாததுடன் அவை பீ.ஓ.சி தலைமையக கட்டிட அமைப்பின் ஒப்பந்தம் கணிசமான அளவு முடித்த பிறகு இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. இந்த கணக்கியல் நடவடிக்கையின் விளைவாக, உண்மையான செலவுகள் பாதீட்டு ஒதுக்கீட்டை விட அதிகமாக உள்ளது. | பாதீட்டு மற்றும் உண்மையான செலவுகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | தீ கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு அமைப்பு | 2,500,000 | 23,646,000 | 21,146,000 | எட்ரஸபல் ∴பயர் டிடெக்ஷன் மற்றும் எலாம் சிஸ்டம் மற்றும் டு-வே ∴பயர்மேன் டெலிபோன் கொமியுனிகேஷன் சிஸ்டம் வழங்கள் மற்றும் நிறுவுதலுக்கான ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட அலாரம் ஒலிப்பான்கள், கட்டுப்பாட்டு தொகுதிகள், மானிட்டர் மாட்யூல்கள், ஸ்மோக் டிடெக்டர்கள், ஹீட் டிடெக்டர்கள், ∴பயர்மேன் ∴போன்கள் போன்ற உபகரணங்களுக்கு ஏற்படும் செலவுகள். இலங்கை வங்கியின் தலைமையகக் கட்டிடத்திற்கான தொலைபேசித் தொடர்பாடல் முறையானது, மேற்படி ஒப்பந்தத்தை கணிசமானஅளவு பூர்த்தி செய்ததன் பின்னர், மூலதனமாக்கப்படாது இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. இந்த கணக்கியல் நடவடிக்கையின் விளைவாக, உண்மையான செலவுகள் பாதீட்டு ஒதுக்கீட்டை விட அதிகமாக உள்ளது. |
| (v) | பாதுகாப்பு அலாரம் & சிசிடிவி | - | 293,000 | 293,000 | தரைத்தளத்தில் உள்ள தீயணைப்பு கட்டுப்பாட்டு மையத்தில் சிசிடிவி கேமரா வழங்கள் செய்யப்பட்டு நிறுவப்பட வேண்டும், ஆனால் சிசிடிவி கேமராக்கள் பொருத்துவதற்கு பராமரிப்பு பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. |
| (vi) | பி.ஓ.சி வேலை தொடர்பான பொருட்களுக்கான செலவு | 10,284,000 | 15,219,000 | 4,935,000 | இந்த செலவில் இலங்கை வங்கியின் சார்பாக மேற்கொள்ளப்படும் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் அடங்கும். மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பி.ஓ.சி சார்பாக கையாளப்பட்ட பணிகளின் காரணமாக, பாதீட்டு தொகையை விட உண்மையான செலவானது அதிகரித்திருப்பதுடன் இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஆண்டில் பொருட்களின் உண்மையான விலை பாதீட்டைவிட உயர்ந்துள்ளது. |